இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

அப்பொழுது ஒரு பெரும் புயல் அடித்தது. அலைகள் படகின் மேல் தொடர்ந்து மோத, அது தண்ணீரால் நிரம்பிக்கொண்டிருந்தது. அவரோ, படகின் பிற்பகுதியில் தலையணை வைத்துத் தூங்கிக்கொண்டிருந்தார். அவர்கள், “போதகரே, சாகப்போகிறோமே! உமக்குக் கவலை இல்லையா?” என்று சொல்லி அவை எழுப்பினார்கள். அவர் விழித்தெழுந்து காற்றைக் கடிந்துகொண்டார். கடலே நோக்கி, “இரையாதே, அமைதியாயிரு” என்றார். காற்று அடங்கியது; மிகுந்து அமைதி உண்டாயிற்று . (மாக்கு 4: 37-39)

# குருத்துவ அருள்பொழிவு புனிதப்படுத்தும் உலக இறைவேண்டல் தினம் கொண்டாடப்பட்டது

**கோலாலம்பூர்:** கடந்த 11, ஜூன் 2021 அன்று, பேராயர் ஜூலியன் லியாவ், இங்குள்ள திருஇருதய ஆண்டவர் ஆலயத்தில், குருத்துவ அருள்பொழிவை புனிதப்படுத்தும் உலக இறைவேண்டல் தினத்தைக் கொண்டாடினார். அன்று, பேராயர் இயேசுவின் மனத்தாழ்மையை வலியுறுத்தும் இரக்கம்மிகு தூய இருதயத்தின் பக்தி குறித்து பேசினார்.

அவர், நாம் இப்போது எதிர்கொள்ளும் எதிர்பாராத இத்தொற்று காலத்தில் நமது வாழ்வை இயேசுவின் வாழ்வோடு இணைந்துப் பாரக்க வேண்டும் என்றார். ஒருவர் ஒருவருக்காக இறைவேண்டல் செய்யவும், ஒருவரை ஒருவர் அரவணைக்கவும், விண்ணப்பங்களை எழுப்பவும் வேண்டிய காலம் இது என்று அறிவுறுத்தினர். அருள்பணியாளர்கள் இயேசுவைப் போலவே, தங்கள் அருள்பணியில் மனத்தாழ்மையும் கடவுளின் அன்பையும் வெளிப்படுத்துபவர்களாகத் திகழ வேண்டும் என்பதையும் நினைவூட்டினர்.

மக்களை விட்டுப் பிரிந்து, அமைதியில் வாழும் இக்காலக்கட்டத்தில் அருள்பணியாளர்களின் வாழக்கையானது, தங்களது அழைப்பு, பணிவு வாழ்வு மற்றும் ஒற்றுமைக்கான வழிவகைகளைக் கண்டறிவதில் கவனம் செலுத்தும் காலத்தைப் பிரதிபலிப்பதாக அமைய வேண்டும் என்றார். மேலும், அருள்பணியாளர்ளும் இறைமக்களும் தங்களுக்குகிடையில் ஏற்பட்டுள்ள பிணக்குகளுக்குத் தீர்வுக் காணும் வழிவகைகளைக் கண்டறிந்து மீண்டும் இணைந்து செயல்பட ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். தொடர்ந்து, இயேசு வின் காயப்பட்ட இதயம் நம்மை குணப் படுத்தும் என்ற நம்பிக்கையுடன், இயேசுவின் திருஇருதயத்தை அண்டி வர வேண்டும் என்றும், இந்நாள் அனை வருக்கும் நினைவூட்டுகிறது என்றும் போதித்தார்.



*திருஇருதய ஆண்டவர் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றும் பேராயர் ஜூலியன் லியாவ்*

அன்று, நடமாட்டக் கட்டுப்பாட்டின் காரணமாக, திருப்பலி கோலாலம்பூர் இறையைத்தல் பணிக்குழுவின் ஏற்பாட்டில், இயங்கலை வழியாக இறைமக்களுக்கு நேரடி ஒளிப்பரப்புச் செய்யப்பட்டது. திருப்பலிக்கு முன் நற்கருணை ஆராதனை இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# மலேசிய மேய்ப்புப்பணி மாநாடு 2026
## ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் வழங்கும் நோக்குநிலை

**பினாங்கு:** 2026-ல் நடைபெறவுள்ள மலேசியாவின் அனைத்து மறைமாவட்டங்களையும் உள்ளடக்கிய மேய்ப்புப்பணி மாநாடு குறித்து ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள் காணொளி பகிர்வு ஒன்றை வழங்கினார். அப்பகிர்வின் தொடக்கத்தில், இதுவே முதன்முறையாக மலேசியாவின் ஒன்பது மறைமாவட்டங்களும் ஒன்றுகூடி மலேசியா திருஅவைக்கான எதிர்கால மேய்ப்புப்பணித்திட்டத்தைத் தீட்டவுள்ளதாக அறிவித்தார்.

இயேசு கிறிஸ்துவின் அன்பு சீடர்களே,

அன்புள்ள அருள்பணியாளர்களே, துறவற சபையினரே மற்றும் மதிப்புமிக்க பொதுநிலையினரே, நீங்கள் அனைவரும் 2000 ஆண்டுக்கு முற்பட்ட காலத்தை பின்னோக்கிப் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறேன். பெந்தகோஸ்து தினம், திருஅவை மற்றும் அதன் மறைத்தூதுப் பணி ஆகிய இரண்டையும் ஒன்று சேர ஈன்றெடுத்தது.

மறைத்தூது என்றால் நமக்குப் புலப்படுவது என்ன? ஆம், மறைத்தூது என்பது இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி பரப்பு தொடர்ச்சியகும். இந்த மறைப்பரப்பானது, இயேசு குறிப்பாக தம் திருத்தூதர்களுக்கு அளித்த கட்டளையிலிருந்துத் தோன்றியது. பின்னர் அவர்களிடமிருந்துச் சீடர்களுக்கு அளிக்கப்பட்டது. அதற்கொப்ப இன்றைய திருப்பலி வாசகமும் கி.பி. 48-ல் நிகழ்ந்த எருசலேம் திருச்சங்கத்தைப் பற்றி பேசுகிறது. அங்கு பேதுருவும், பவுலும் இதர திருத்தூதர்களும் ஒன்றுகூடியிருந்தனர். அப்போது, நற்செய்தியானது எருசலேமுக்கு வேளியேயும் பரவி வந்ததால், முக்கிய தீர்மானங்கள் எடுக்க வேண்டிய நெருக்கடி ஏற்ப்பட்டது. இங்கு நாம் கேட்க வேண்டிய கேளிவியானது- 2000 ஆண்டுகளுக்கு முன், அந்த முதல் திருச்சங்கத்தில் திருஅவையிடம் தூய ஆவியார் வெளிப்படுத்தியது என்ன?

இவ்வேளையில், அந்த எருசலேம் திருச்சங்கத்திலிருந்து 1965-ல் முடிவுற்ற இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் வரையிலான காலம் வரை நிகழ்ந்தவற்றில் விரைவாகக் கண்ணோட்டமிடுவோம். திருத்தந்தை ஆறாம் பவுல் உலக ஆயர்களுடன் ஒன்றுகூடி அதே கேள்வியை எழுப்பினார். அது என்ன கேள்வி? ஆம், 1965-ல் கூடும் திருச்சங்கத்திடம் தூய ஆவியார் வெளிப்படுத்தும் செய்தி என்ன?

அதைத் தொடர்ந்து, மீண்டும் 1965 தொடங்கி, ஆதாவது 11 ஆண்டுகள் கழித்து, 1976-ல் தீபகற்ப மலேசிய திருஅவை இங்கு, பினாங்கில் ‘அர்ஜினாமெந்தோ’ எனும் மறுமலர்ச்சி ஒன்றுகூடலில் பங்குபெற்றது. ஆயர்களும் அனைத்து அருள்பணியாளர்களும் இதில் கலந்துகொண்டனர். அதே கேள்வி இங்கேயும் எழுப்பப்பட்டது. அது என்ன கேள்வி? ஆம், தூய ஆவியார் தீபகற்ப மலேசிய திருஅவைக்குக் கூறும் செய்தி என்ன?

பின்னர், மே திங்கள் 2016-ல் பினாங்கு மறைமாவட்ட குருத்துவக் குழுமம் அதே கேள்வியை முன்வைத்தது. தூய ஆவியார் பினாங்கு மறைமவட்டத்திற்குக் கூறும் செய்தி யாது? நான் அக்கூட்டத்தில் தூரநோக்கு மற்றும் மறைத்தூதுப் பணி குறித்து 12 கருத்துக்களை எடுத்துரைத்தேன். அந்த வருடம்தான் தீபகற்ப மலேசியா மேய்ப்புப்பணி மாநாடு 4 ஜோகூரில் நடபெற்றது. அம்மாநாட்டில், மேய்ப்பர்களாக பேராயர் ஜூலியன் லியாவ், ஆயர் பெர்னர்ட் பவுல் மற்றும் நானும் செயல்பட்டோம். மேற்கண்ட அதே கேளிவியை இங்கும் எழுப்பினோம். கேள்வியில் எந்த மாற்றமும் இல்லை. தூய ஆவியார் தீபகற்ப மலேசிய திருஅவைக்குக் கூறும் செய்தி என்ன?


*ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ்*

இக்கேள்வியை மையமாகக் கொண்டு மூன்று புனித சொற்களை அடையாளம் கண்டோம். அவை ‘உள்ளடக்கம், ஆக்கப்பூர்வம் மற்றும் உறவை கட்டுதல்’ ஆனால், இன்றும் இதனை நடைமுறைப் படுத்துவதில் முயற்சித்து வருகிறோம். இந்த கொவிட்-19 காலத்தில் தூய ஆவியார் தீபகற்ப மலேசிய திருஅவைக்கு இதே கருத்தைத்தான் வெளிப்படுத்துகிறார். அதாவது, ‘உள்ளடக்கம், ஆக்கப்பூர்வம் மற்றும் உறவை கட்டுதல்’ ஆகும். நான் நினைக்கிறேன் இந்த மூன்று சொற்கள்தான் இந்த கோவிட்-19-ன் சவால்களை எதிர்கொள்ள நம்மைத் தயாரித்தியுள்ளது எனலாம்.

எனவே, 2026-ல் நிகழவுள்ள மேய்ப்புப்பணி மாநாட்டை நோக்கி ஒரே எண்ணம், ஒரே மனம் மற்றும் ஒரே சிந்தனையோடு பயணிக்க வேண்டுகிறேன். நாம் தீபகற்ப மலேசியா திருஅவையாக அல்ல, மாறாக மலேசிய திருஅவையாக ஒன்று கூடவிருக்கிறோம். மலேசிய திருஅவை கொண்டிருக்கும் தீபகற்பம், சபா மற்றும் சரவாக் ஆகியவற்றுக்கும் அதே கேள்வியை எழுப்பவுள்ளோம். 2026-ஆம் ஆண்டை நோக்கி, நாம் அனைவரையும் தயார்படுத்துவதற்கு மிக எளிய, ஆனால் தெளிவான மற்றும் முறையான செயல் முறையை மேற்கொள்ளப்போகிறோம். இதன் வழி தூய ஆவியார் மலேசிய திருஅவைக்கு அளிக்கவுள்ள பதில்தான் என்ன என்பதை அறிந்துணர இயலும். குறிப்பாக சபா மற்றும் சரவாக் கொண்டுள்ள மறைமாவட்டங்களோடு உறவை மேம்படுத்த ஆக்கப்பூர்வமான, உள்ளடக்கிய பயணத்தில் இப்பதிலைக் கண்டறிய உங்களை அழைக்கிறோம். தீபகற்ப மலேசியாவில் எல்லாம் முறையாக இருந்தாலும், சபா மற்றும் சரவாக் திருஅவையோடு நாம் கொண்டுள்ள உறவு பாலத்தைச் சீர்படுத்த ஒன்பது மறைமாவட்டங்களாக ஒன்றிணைய உள்ளோம்.

இந்த மேற்ப்புப்பணி மாநாட்டுக்கான ஏற்பாட்டுக்குழு எடுக்க வேண்டிய நடைமுறை தயாரிப்பு மற்றும் உள்ளடக் கம் பற்றிய வழிமுறையைத் தயாரித் துள்ளது.

-தொடர்ச்சி - அடுத்துப்பக்கம்

# பொதுநிலையினர் கழகங்கள் விதிமுறையில் மாற்றம்

**வத்திக்கான்:** பன்னாட்டு கத்தோலிக்க பொதுநிலையினர் அமைப்புகளில், தலைவர்களின் பதவிக்காலத்தை வரையறுப்பது குறித்த பொதுவான விதிமுறைகளை, பொதுநிலையினர், குடும்பம், மற்றும், வாழ்வுக்கான திருப்பீட அவை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் ஒப்புதலோடு ஜூன் 11, கடந்த வெள்ளியன்று வெளியிட்டுள்ளது.

பன்னாட்டு கத்தோலிக்க அமைப்புகளில் தலைமைப் பதவி வகிப்பவர்கள், குழுமத்திற்குப் பணியாற்றுகின்றவர்களாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும், அப்பதவியில், தலைவர்கள், தங்களை முன்னிலைப்படுத்தும் ஆபத்துக்களையும், உரிமை மீறல்களையும் தவிர்க்கும் நோக்கத்திலும், இந்த புதிய விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த பன்னாட்டு அமைப்புக்களின் தலைவர்கள், மற்றும் நிர்வாக குழுவினரின் பதவிக்காலம், தொடர்ந்து பத்து ஆண்டுகளுக்குமேல் இருக்கக்கூடாது என்றும், பன்னாட்டு நிர்வாகக் குழுவுக்கு இடம் பெறும் தேர்தல் முறைகளில், அவற்றின் உறுப்பினர்களின் பிரதிநிதித்துவம் அவசியம் என்றும் கூறப்பட்டுள்ளது.

பன்னாட்டு கத்தோலிக்க அமைப்புகளின் தலைவர்கள், தங்களது பணிகளை உண்மையான சேவை மனப்பான்மையில் ஆற்றுவதை ஊக்குவிக்கும் நோக்கத்திலும், இந்த விதிமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த விதிமுறைகள், இன்னும் மூன்று மாதங்களுக்குள் அமலுக்கு வரும் என்றும், இந்த விதிமுறைகள், பொதுநிலையினர், குடும்பம், மற்றும், வாழ்வுக்கான திருப்பீட அவையினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும், அந்த அவையால் உருவாக்கப்பட்ட 109 அமைப்புகளுக்குப் பொருந்தும் என்றும் கூறப்பட்டுள்ளது.

முன் பக்கத் தொடர்ச்சி

இதன்படி நான்கு துறைகளில் நமது கவனத்தைச் செலுத்த உள்ளோம். அவை:

1. நமது குடும்பம்
2. முழுமையான மலேசிய திருஅவை
3. மலேசிய சமூகம்- உண்மைநிலை
4. சூழலியல் (சுற்றுச் சூழல்)

தூய ஆவியார் ஆக்கப்பூர்வமாகச் செயல்படுவதுபோல் நாமும் செயல்படுவோம். ஒரே மலேசிய திருஅவை என்ற சிந்தனை மேலோங்க, சபா, சரவாக் இவற்றோடு தீபகற்ப மலேசியா திருஅவையையும் இணைத் துப் பார்க்க நீங்கள் தயாராக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். சிலுவையில் இயேசு தந்தையையும் தூய ஆவியாரையும் தன்னில் உள்ளடக்கியவராக இருந் தார். காணாமற்போன மகன் உவமையில் தந்தை இருக்கரம் விரித்தவராய் அரவணைத்தது போல் நீங்களும் அரவணைப்போராய் இருக்க வேண்டுகிறைன். இருகரம் குவித்து இறைவேண்டல் செய்யும் அன்னை மரியாவைப் போல் ஒருவர் ஒருவருக் காக பரிந்துரைத்து வேண்டுவோம்.

எனவே, நமது திருஅவையானது தூய ஆவியாரால் வழநடத்தப்படுகிறது என்பதை நம்புங்கள். ஆயர்கள், அருள்பணியாளர்கள், திருத்தொண் டர், அருட்சகோதர-சகோரதரிகள், பொதுநிலையினர் யாவரும் தூய ஆவியாரின் தலைமையில் ஒன்பது ஆயர்களுடன் இணைந்து பயணிப் போம். ஆமென்.

# வயது முதிர்ந்தோர் அவமதிப்பு விழிப்புணர்வு உலக நாள்

**வத்திக்கான்** கடந்த வயது முதிர்ந்தோர் அவமதிப்பு தினத்தை நினைவுகூர்ந்த வேளையில், முதியோர் மதிக்கப்படாத இடத்தில், இளையோருக்கு வருங்காலம் கிடையாது என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஜூன் 15 அன்று, தன் டுவிட்டர் வலைப்பக்கத்தில் செய்தியொன்றை பதிவுசெய்துள்ளார்.

வயதுமுதிர்ந்தோர் அவமதிப்பு விழிப்புணர்வு உலக நாள், ஜூன் 15, கடந்த செவ்வாயன்று கடைபிடிக்கப்பட்டதை மையப்படுத்தி, தன் டுவிட்டர் செய்தியை வெளியிட்டுள்ள திருத்தந்தை, சமுதாயத்தில் வயது முதிர்ந்தோரின் உரிமைகள் மதிக்கப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் பொது அவை, 2011-ம் ஆண்டில், வயது முதிர்ந்தோர் அவமதிப்பு விழிப்புணர்வு உலக நாளை அங்கீகரித்தது. நீதி கிடைக்க வழிசெய்தல் என்ற தலைப்பில், கடந்த செவ்வாயன்று, இந்த உலக நாள் கடைப்பிடிக்கப்பட்டது.

**ஐ.நா. பொதுச்செயலர்**

இந்த பெருந்தொற்று, வயதுமுதிர்ந்தோர் மத்தியில் வார்த்தையால் சொல்ல முடியாத அச்சத்தையும், துன்பங்களையும் உருவாக் கியுள்ளது என்றும், வறுமை, பாகுபாடு, தனிமை போன்றவற்றை, இவர்கள், குறிப்பாக, வளரும் நாடுகளில் அதிகம் எதிர்கொள்கின்றனர் என்றும், கூட்டேரஸ் அவர்கள் கூறியுள்ளார்.

மற்ற மனிதர்களைப் போலவே, வயதானவர்களும், வாழ்வு மற்றும், நலவாழ்வு சார்ந்த உரிமைகளைக் கொண்டிருக்கின்றனர் என்றும், மருத்துவத்தில் வாழ்வைப் பாதுகாப்பது குறித்து மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள், அனைவரின் மனித உரிமைகள் மற்றும், மாண்பை மதிப்பதாய் இருக்கவேண்டும் என்றும், கூட்டேரஸ் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

கொரோனா பெருந்தொற்று காலத்தில் வயது முதிர்ந்தோரில் 73 விழுக்காட்டினர் அவமதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

உலக அளவில் அறுபது வயதுக்கு மேற்பட்டோரில் 16 விழுக்காட்டினர்



மேலும், இந்த உலக நாளையொட்டி காணொளிச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ள, ஐ.நா. தலைமைப் பொதுச் செயலர் அந்தோனியோ கூட்டேரஸ் அவர்கள், கொரோனா பெருந்தொற்றால் அனைத்து வயதினரும் தாக்கப்பட்டாலும், இந்நோயால் 80 வயதுக்கு மேற்பட்டோரின் இறப்பு விகிதம் ஐந்து மடங்காக உள்ளது என்று கூறியுள்ளார்.

அவமதிக்கப்படுகின்றனர். அமெரிக்க ஐக்கிய நாட்டில், ஒவ்வோர் ஆண்டும், அறுபதும், அதற்கு மேற்பட்ட வயதுள்ளோரில் பத்தில் ஒருவர், அனைத்து நிலைகளிலும் புறக்கணிக்கப்பட்டு வருகின் றனர் என்று செய்திகள் கூறுகின்றன.

*-மேரி தெரேசா: வத்திக்கான் செய்திகள்*

# திருத்தொண்டராக அருள்பொழிவு கொண்டாட்டம்



எதிர்வரும் 24 ஜூலை 2021 அன்று, தம்பின் புனித ஜோன் மரி பங்கைச் சேர்ந்த சகோ. மைக்கல் தாஸ் அவர்கள் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களால் திருத்தொண்டராக அருள்பொழிவுச் செய்யப்படவுள்ளார்.

இவர் திருஅவை தத்துவயியலை பினாங்கு குருத்துவக் கல்லூரியிலும், (2014-2016), இறையியலை கூச்சிங் குருத்துவக் கல்லூரியில் (2016-2021) கற்றார். இப்போது இவர் பேராயர் வசிப்பிடத்தில் தங்கியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிறிஸ்துவின் அரவணைப்பை நாடுவோம்

இன்றைய மாற்கு நற்செய்தியும் முதல் வாசகம் யோபும், உலகத்தைப் படைத்தவர் கடவுள் என்பதை நினைவுறுத்துகின்றன. இதனால், இந்த உலகத்தை இயக்கும் அனைத்தின் மீதும் அவருக்கு சக்தி உண்டு என்பது உறுதியாகிறது. அலைக்கழிக்கும் உலகில் நம்மிறைவன் இயேசு கிறிஸ்து, நம்மோடு இருக்கிறார். நமது வாழ்க்கையிலும் சரி, உலகச் சரித்திரத்திலும் சரி எப்போது தலையிட வேண்டும் என்பதை கடவுள் நன்கு அறிந்துள்ளார். அவரது பிள்ளைகளாகிய நம்மீதும் உலகின் மீதும் வைத்திருக்கும் அன்பின் காரணமாகவே அவர் தலையிடுவார் என இரண்டாம் வாசகம் கூறுகிறது. நம் அனைவரையும் மீட்புக்காக்க பொருத்தமான சமயத்தில் தமது ஒரே மகனை அனுப்பிய போது இதனைச் செய்தார்.

வாழ்க்கை எனும் படகு எப்போதும் சீராக ஒரே நிலையில் பயணம் செய்யாது. புயல் காற்று இடி மின்னல் ஆகியவற்றோடு கடல் கொந்தளிப்பையும் தாண்டி பயணம் செய்ய வேண்டும். சில வேளைகளில் படகு மூழ்கி விடக்கூடிய சாத்தியமும் ஏற்படும். அப்போது நற்செய்தியில் வருவது போல் இயேசு தூங்கிக் கொண்டிருக்கிறார் என நாம் புலம்புவோம் கதறுவோம். ”போதகரே, சாகப்போகிறோமே! உமக்குக் கவலையில்லையா?” (மாற்கு4:38) எனச் சீடர்கள் கேட்டது போல நாமும் கேட்போம்!

சீடர்கள் எதிர்நோக்கிய சூழ்நிலையை நாமும் நமது வாழ்க்கையில் சந்திக்கிறோம். வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களும் குழப்பங்களும் பிரச்னைகளும் வாழ்க்கையின் ஓரத்திற்கே நம்மைத் தள்ளிவிடக் கூடும். வேலையில்லாத் திண்டாட்டம், திருமண வாழ்க்கையில் சிக்கல், பிள்ளைகளால் தொல்லை, பணி உயர்வு முடக்கம், வேலை சுமை, பரீட்சையில் விரக்தி என பிரச்னைகளை அடுக்கிக்கொண்டே போகலாம். ஆளுக்கு ஆள் சிக்கலும் குழப்பமும் வேறுபடும். சந்திக்கும் பிரச்னைகளும் வித்தியாசப்படும். அச்சமும் அச்சுறுத்தலும் நம்மை ஆட்டி படைக்கும். கடவுள் நம்மைக் கைவிட்டுவிட்டார் என்ற எண்ணம் மேலோங்கி, நம்பிக்கை தளர்ந்துவிடும். என்ன செய்வதென்று தெரியாமல் தத்தளிப்போம்.

இந்த பிரச்னைகளுக்கு இன்றைய நற்செய்தி மூன்று உண்மைகளை வெளிப்படுத்துகின்றது. முதலாவது, கடல் ஒன்றும் சீடர்களுக்குப் புதியதல்ல. அவர்களது வாழ்க்கையே கடலை நம்பி இருந்தது. சீடர்களோடு இயேசு இருக்கிறார். புயலோடு அவர்கள் போராடுவதை அவர் அறிவார். இரண்டாவது, வாழ்க்கைப் பயணத்தில் நமக்கு எந்தளவுக்கு அனுபவம் இருந்தாலும், சில வேளையில் நாம் எதிர்நோக்கும் பிரச்னைகளும் சிக்கல்களும் வேதனைகளும் நம்மை நிலைத் தடுமாறச் செய்துவிடும். மூன்றாவது, புயலை அடக்கியப் பின்னர் “இவர் யாரோ?” (மாற்கு4:41) எனக் கேள்வி கேட்ட சீடர்களைக் கரைச் சேர்ந்ததும் இயேசு கைவிடவில்லை. தம்மோடு அரவணைத்துக் கொண்டார்.

“இதோ! உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக் கிறேன்” (மத்தேயு 28:20) என வாக்குறுதி அளித்தக் கடவுளிடம் நாமும் நமது பிரச்னைகளையும் சிக்கல்களையும் வேதனைகளையும் கொண்டு செல்வோம். யோபு போல் நம்பிக்கையோடு காத்திருப்போம்; நமக்காக உயிர் தியாகம் செய்த கிறிஸ்துவின் பேரன்பு நம்மைக் காக்கும் (2கொரி.5:14).

*-அந்தோணி இன்னாசி ஸ்ரீ கெம்பாஙான்*

**பொதுக்காலம் 12-ஆம் ஞாயிறு**

யோபு 38: 1, 8-11
107: 23-24. 25-26. 28-29. 30-31
2 கொரி 5: 14-17
மாற்கு 4: 35-41

ஞாயிறு வாசகம் -ஆண்டு 2
வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1
திருப்புகழ்மாலை - வாரம் 4